99

MAY 1930

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து

உரு-வது மஹா ஸந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய

சுவாமிகள் மீது

# திருப்பதிகமும் பஞ்சரத்தினமும்

இவை

இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்

திரு. P. சிவசாமிசேர்வையவர்களால்

இயற்றிச்

சீகாழி திரிபுரசுந்தரி பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றன.

1930. [கருல.

Q23:4198W-
A130

உ

சிவமயம்.

தருமபுர ஆதீனத்து

ஸ்ரீலஸ்ரீ, சுப்பிரமணியசுவாமிகள் பேரில்

# திருப்பதிகம்.

## காப்பு நேரிசை வெண்பா.

சீரார் தருமையா தீனகுரு மாமணியாந்
தாராருஞ் சுப்ரமண்யன் றன்னடிக்கே—பேராருஞ்
செந்தமிழ்ப்பா மாலைசொலச் செய்யவரு டானளிக்குங்
கந்தனுக்கு முன்னோன் கழல்.

## நூல். எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கோமலி தரளங் கொழித்திடு திரையார்
குரைகடன் மருங்குடுத் தவளின்
தாமலி தவமோ தமிழணங் குஞற்று
தனிநெடுந் தவப்பய னதுவோ
தேமலி மறையு மாகம நெறியுந்
திகழ்தர வுதித்தனை சகத்துத்
தூமலி தரும புரத்தினி லமர்ந்த
சுப்பிர மணியதே சிகனே. (க)

தேடரு மகங்கள் பலபல வியற்றல்
செயவரு தருநிழ லரசும்
நாடருங் கனக நளினவா தனமும்
நலனுறு திருமகள் புணர்ப்புஞ்
சேடரும் போற்றுஞ் செல்வமும் நினது
செங்கம லப்பதச் சீராம்
தோடரு மலரார் தருமையி லமர்ந்த
சுப்பிர மணியதே சிகனே. (அ)

சொன்னலங் கடந்த நின்பதத் தொழும்பு
துகளறுத் தின்பவீ டளிக்கு
மின்னல முணரார் சுவர்க்கபோ காதி
வினிதுறும் நிலையென மருண்டே
யின்னலென் றறியா தியற்றுவர் தரும
மெளிதெனத் தவத்துறை புகுவர்
துன்னரும் புகழார் தருமையி லமர்ந்த
சுப்பிர மணியதே சிகனே. (கூ)

கங்கையை மதியை யணிந்திடு முறையுங்
கரதலத் தினிதிருந் தொளிருஞ்
சங்கையின் மழுவு முழையுந வுடுக்குஞ்
சாற்றுமெண் டோளொடு மரவப்
பங்கமி லணியுங் கரந்துநீ வருவான்
பரிந்துல கியற்றிய தவமென்
தொங்கலார் பொழில்சூழ் தருமையி லமர்ந்த
சுப்பிர மணியதே சிகனே. (ய)

வேலுமயிலுந்துணை.

# தருமைச்
# சுப்பிரமணியதேசிகசுவாமிகள்பேரில்
# பஞ்சரத்தினம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்பூத்த தருமைமடா லயந்திகழ
வவதரித்த தேவ தேவே
பார்பூத்த தவப்பயனே பெருங்கருணை
வாரிதியே படர்கல் லாரத்
தார்பூத்த திருவுருவே தமிழகத்திற்
காதனமே தமியேற் காகும்
பேர்பூத்த சுகநிதியே சுப்ரமண்ய
தேசிகநீ பெரியர் வாழ்வே. (க)

பண்டிருக்கு முதலாய மறைமுடிவி
னுறுபயனும் பாண்செய் நீல
வண்டிருக்குங் கடுக்கையணி சொக்கலிங்கக்
காதலனே வணங்கு மென்றன்
தொண்டிருக்கும் பதங்குலவு சுகுணப்ர
வாகரனே தூய வன்பர்
கண்டிருக்குங் கிழியீடே சுப்பிரமண்ய
தேசிகநீ கமலை வாழ்வே. (உ)

என்னலமு மடியர்தமக் கினிதருள
　　விவணுதித்த வின்ப மான
பன்னலமு மொருங்கமைந்த பெருந்தருவே
　　யருங்கலையும் பகருஞ் செய்ய
சொன்னலமுந் துலங்குதவ னேயருள்வாய்
　　மும்மலத்தின் றுகள றுக்கு
மன்னலமு மார்பரனே சுப்ரமண்ய
　　தேசிகநீ யடியர் வாழ்வே. (௩)

மந்தமனத் தடியாக விருணீக்கி
　　யவரிதய வாரி சத்துச்
சந்தமலர் நெக்குடைந்து சிவஞான
　　மதுபொழிந்து தழைத்துத் தூய்மைக்
கந்தமலிந் திடவுதயஞ் செயுமெல்லி
　　தானெனவே கருதி வையஞ்
சந்ததமுந் துதிபரவு சுப்ரமண்ய
　　தேசிகநீ தருமை வாழ்வே. (௪)

புகலரிய வாகமத்தின் றாயகம
　　காமந்த்ர புனித ராஜ
செகமுழுதும் புகழ்தருமைச் சம்பந்த
　　பீடநனி சிறக்க வந்த
மகராஜர் பலர்பரவு சிவராஜ
　　போகனே வாழி யென்றும்
சகலவிரு துங்குலவு சுப்ரமண்ய
　　தேசிகநீ சகத்தின் வாழ்வே. (௫)

சுபம்.

## வாழ்த்து வெண்பா.

சாற்று தமிழ்ஞான சம்பந்தர் மாமரபிற்
போற்று குருமணியாய்ப் பொங்குதவத்—தாற்றலுறு
நற்சுப் பிரமணிய நாட்டுபுகழ்த் தேசிகநீ
கற்பமெலாம் வாழி கனிந்து.

## அஷ்டநாகபந்த வெண்பா.

சுகுண குருவாழி சுப்ர மணிய
தகுசீ ரணிபசுந் தாள — மிதும
மிருததவ மின்குல வும்வாக தாகா
தரும புரவர தா.

முற்றும்.

உ

சிவமயம்.

மதுரைச்சங்கத்து வித்துவான்

# ஸ்ரீகாழி ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை

அவர்களியற்றியது.

---

சேங்கமல நோக்கஞ் சிவபோக மீன்றருளும்
நங்கடரு மைக்குருமே னற்பதிக—மங்களமா
முன்ன மொழிந்தான் முகவைச் சிவசாமி
கன்னலெனப் பாடுங் கவி.